THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes.

(b) As the Government had already decided to restore the exemption granted on the sales of dried and salted fish, no separate action was taken on this representation.

விற்பனைவரி அதிகாரியின்மீது தாக்குதல்

* 4 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :
திரு. மீ. கலியாணசுந்தரம் : } கனம் கைத்தொழில்
திரு. செ. மாதவன் :

அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1-ம் நாள், மாதவரத்தில் உள்ள வாணிப நிலையம் ஒன்றில், விற்பனைவரி அலுவலாளர்கள் தாக்கப்பட்டனரா ?

(இ) அதன்மீது அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?.

THE HON. SRI R. VENKATARAMAN : (a) and (b) : With reference to a complaint made, the Police investigated the case and filed a charge sheet against the 20 accused in the Court of the Sub-divisional Magistrate, Poonamallee. All the accused have been committed to Sessions Court, Chingleput.

திரு. மீ. கலியாணசுந்தரம் : தாக்கப்பட்ட அரசாங்கச் சிப்பந்திகள் யார் யார் ? அவர்களுக்கு ஏதாவது நஷ்டயீடு கொடுக்கப்பட்டதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கமர்ஷியல் டாக்சஸ் டிப்பார்ட்மெண்ட்டைச் சேர்ந்தவர்கள் நஷ்டயீடு ஒன்றும் கொடுக்கப்படவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : தாக்கியவர்கள் மீது எந்த எந்த பிரிவுகளின் கீழ்குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றது என்று அறியலாமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதெல்லாம் இப்போது கோர்ட்டில் இருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : எதிரிகள் என்று சொன்னார்கள். அவர்கள் யார் என்று தெரிந்துகொள்ளலாமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தக் கம்பெனியைச் சேர்ந்தவர்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : விற்பனை வரி அதிகாரிகள் எந்தக் காரணத்திற்காகத் தாக்கப்பட்டார்கள் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: புத்தகங்கள் எடுக்கிறபோது தாக்கப்பட்டார்கள்.

19th January 1965]

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, நிலையங்களில் சோதனை செய்யும் விற்பனை வரி அலுவலாளர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது ? இந்த நிலையை யொட்டி எத்தகைய உதவிகள் அளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர்கள் போலீஸ் பந்தோபஸ்துடன் செல்வதற்கு உரிமை இருக்கிறது. அவ்வாறு அழைத்துக் கொண்டும் செல்கிறார்கள்.

திரு. சா. கணேசன் : எந்தக் கம்பெனி ஆள்கள் இவர்களை துன்புறுத்தினார்கள் ? என்ன காரணத்திற்காக அவர்களைத் துன்புறுத்தினார்கள் என்பனவற்றை அமைச்சர் அவர்கள் சொல்லமுடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : "செனித் லாம்ஸ் அன்ட் எலக்ட்ரிக்கல்ஸ் கம்பெனி லிமிடெட்" என்ன காரணம் என்றால் அவர்கள் புத்தகங்களை எடுக்கிறபோது தடுத்து அவர்கள் பலாத்காரம் செய்தார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இவ்வாறு தாக்கப்பட்ட சம்பவம் நடந்தபோது என்னஎன்ன விவரங்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது ? யார் யார் தாக்கியது. எப்படித் தாக்கினார்கள். அரசாங்கச் சிப்பந்திகளுக்கு காயம் ஏற்பட்டதா, இந்த விவரங்கள் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர்கள் தாக்கப்பட்டார்கள். காயம் இருந்ததா இல்லையா என்பதற்கு என்னிடம் தகவல் இல்லை. இது சம்பந்தமாக கோர்ட்டில் கேஸ் போட்டு செஷன்ஸ் கோர்ட்டில் இருக்கிறபடியால் மற்ற விவரங்கள் சொல்வது அவ்வளவு உசிதமாக இருக்காது என்று நினைக்கிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதிகாரிகளைத் தாக்கிய கம்பெனிக்கும் மத்திய அமைச்சரவையில் உள்ள ஒரு அமைச்சருக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக பேசப்படுவது உண்மையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: யார் பேசுகிறார்கள் என்று தெரியவில்லை. ஒருவேளை அங்கத்தினர் அவர்களே பேசி விட்டு அந்தமாதிரி கேள்வி கேட்கிறார்களோ என்று தெரியவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அமைச்சர் அவர்கள் அந்தக் கம்பெனியின் பெயரைக் குறிப்பிட்டார்கள். அதன் நிர்வாகஸ்தர்கள் யார் யார் என்று அறியலாமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதையெல்லாம் சொல்வதற்கில்லை. யார் மீது கேஸ் போடப்பட்டிருக்கிறதோ அவர்கள் மீது கேஸ் கோர்ட்டில் நடக்கிறது. அதைத்தான் சொல்லலாமே த்விர கம்பெனி ஷேர்ஹோல்டர்கள் யார், டைரக்டர் யார் என்று சொல்லமுடியாது.

[19th January 1965

திரு. ஜே. மாதா கவுடர் : அக் கம்பெனி புத்தகங்கள் எல்லாம் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றனவா ? அதில் கள்ளக் கணக்கு இருக்கிறதா என்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா ?

MR. SPEAKER : The Court must decide. We cannot express an opinion on what the result of the enquiry will be.

திரு. எஸ். முருகையன்: இந்த சோதனையின்போது அவர்கள் போலீஸ் பந்தோபஸ்துடன் சென்றூர்களா? அல்லது தனியாகச் சென்றூர்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்த சோதனையின்போது அவர்கள் கமர்ஷியல் டாக்ஸஸ் ஆபீசர்களுடன் சென்றூர்கள். சம்பவம் நடந்தபின் போலீஸ்காரர்களை வரவழைத்தார்கள்.

MR. SPEAKER : When they came, when they enquired into it are all matters which will come up in the evidence.

SRI M. KALYANASUNDARAM rose—

MR. SPEAKER : The Hon. Member has already put four supplementaries.

SRI M. KALYANASUNDARAM : It is a very important question, Sir.

MR. SPEAKER : Sri M. Kalyanasundaram may now put one more question.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், இந்த கம்பெனியைச் சேர்ந்த சிப்பந்திகளின் மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறதா அல்லது கம்பெனியின் நிர்வாகிகள் மீது வழக்கு போடப்பட்டிருக் கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: யார் யார் தாக்கினூர்களோ அவர்கள் மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது. வழக்குகள் போடப்பட்டிருப்பது கம்பெனி நிர்வாகிகள் மீதா அல்லது டைரக்டர்கள் மீதா என்றெல்லாம் இப்போது சொல்வதற்கில்லை.

புதிய புகைவண்டிப்பாதை.

* 5.கேள்வி—*புலவர் கா. கோவிந்தன் :* கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) ஆற்காடு, செய்யாறு, வந்தவாசி வழியாக இராணிப் பேட்டையையும், திண்டிவனத்தையும் இணைக்கும் புகைவண்டிப் பாதை அமைக்குமாறு மாநில அரசு மத்திய அரசுக்கு யோசனை கூறியதா?

(இ) அதன் முடிவு என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (a) No.

(b) Does not arise.